DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 470 / 2023
Deposition of PW1- திரு.இளங்கோ (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21.07.2025.

எதிரி ஆஜர் இல்லை.

**<u>எதிர் தரப்பில் கு.வி தொடர்ச்சி</u>**

1.எதிரி என்னிடம் குடும்ப செலவுக்காகவும் வீடு கட்டுவதற்காகவும் பணம் வாங்கினார் என்ற விபரத்தை எனது புகாரிலையோ நிரூபண வாக்குமூலத்திலையோ சொல்லவில்லை என்றால் சரிதான். நாராயாணசாமி காலை 10.00 மணிக்கு மேல் என் வீட்டிற்கு வந்தார். சுமார் 1 மணி நேரம் என் வீட்டில் இருந்தார். எதிரி என் வீட்டிற்கு 10.00 – 11.00 மணிக்கு என் வீட்டிற்கு வந்தார். எதிரி எப்படி என் வீட்டிற்கு வந்தார் யார் அழைத்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் 5 வது para வில் எனது வீட்டில் வைத்து அணுகி எதிரி என்னிடம் ரொக்கமாக ரூபாய் 5,00,000 கைமாற்றுக் கடனாக பெற்றுக்கொண்டார். உண்மையில் எதிரிக்கு 500000 லட்சம் கொடுக்கவில்லை என்றும் அதனால் தான் ரூபாய் 500000 த்தை எதிரிக்கு வட்டிக்கு கொடுத்ததாகவும் கைமாற்றுக்கு கொடுத்தாகவும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. தாவா காசோலையில் எதிரியின் பெயர் தேதி விபரங்களை நான் பூர்த்தி செய்ததை எதிரி நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் , அவர் சொன்னபடி நான் காசோலைலை பூர்த்தி செய்து வங்கியில் தாக்கல் செய்தேன். ஆண்டிபட்டியில் இருந்து எதிரி குடியிருக்கும் வடுகபட்டி சுமார் 20 கி,மீ இருக்கலாம். ஆண்டிபட்டியில் இருந்து தாண்டிக்குடி சுமார் 60 கி.மீ இருக்கலாம். எதிரி வேலை செய்யும் இடம் தூரம் என்பதால் அவர் தாண்டிக்குடியில் குடியிருந்து வேலை பார்த்து வந்தார். வடுகப்பட்டியில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். விடுமுறை நாளில் குடும்பத்திற்கு வந்துவிடுவார். இந்த வழக்கு நம்பர் 470/2023, ஆனால் எனது நிரூபண வாக்குமூலத்தில் CC 430/2023 என உள்ளது என்றால் சரிதான். அது எழுத்து பிழையாகும்.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.07.21 17:37:16 +0530

Judicial Magistrate,
Andipatti.